6th March 1959]

THE HON. SRI M. A. MANICKAVELU : I can give an idea of the number of patients treated, Sir. For instance, in Madras City in 1956, it was 46,000 odd in the City and in the mufussal it was 130,000 odd. In 1957, it was 30,000 odd and 106,000 odd respectively. Only such statistics are available.

SRI T. T. DANIEL : May I know from the Hon. Minister the preventive measures so far taken by the Government?

THE HON. SRI M. A. MANICKAVELU : The BCG vaccination is being carried on.

SRI K. VINAYAKAM : Sir, whereas there are a large number of patients seeking admission in the City hospitals and whereas it is never easy to cope up with this rush, will the Government consider the possibility of segregating such of the patients who could not be housed in the hospitals immediately and give them medical aid and treatment as and when it is possible?

THE HON. SRI M. A. MANICKAVELU : Yes. But that also is in other words finding accommodation. If we can segregate them and treat them, we can as well treat them in the existing sanatoria; there is no room for it.

SRI N. MARUDACHALAM : சார், க்ஷயரோகம் பீடிக்கப் பட்டவர்களில் கோவை முனிசிபாலிடியைச் சேர்ந்த தொழிலாளர்கள் எத்தனை பேர் என்று அறிய விரும்புகிறேன்.

MR. SPEAKER : தனிக் கேள்விதான் போடவேண்டும்.

SRI M. K. SOMASUNDARAM : ஒவ்வொரு ஜில்லாவிலும் ஹெட் குவார்ட்டரில் கிளினிக் இருந்த போதிலும் "பெட்கள்" அதிகமாக இல்லாமல் இருக்கின்றன. "பெட்களை" அதிகப்படுத்த அரசாங்கம் முன் வருமா ?

THE HON. SRI M. A. MANICKAVELU : கூடுமான வரை அதிகப் படுத்திக்கொண்டு வருகிறோம். "பெட்களை" அதிகப்படுத்தினால் பணம், மருந்து, டாக்டர்கள் எல்லாம் வேண்டியிருக்கிறது.

SRI N. K. PALANISAMI : இந்த வியாதியால் பீடிக்கப் பட்டவர்கள் ஆஸ்பத்திரிக்குச் சென்று வைத்தியம் செய்து கொள்ள வேண்டுமென்று இருப்பதற்குப் பதிலாக வீடுகளுக்கு டாக்டர்கள் சென்று வைத்தியம் செய்ய ஏற்பாடு செய்யப்படுமா ?

THE HON. SRI M. A. MANICKAVELU : அந்த முறைதான் "domiciliary treatment" என்பது. அதையும் கையாள்வதாக இருக்கிறது.

Marketing Society for Virudhunagar

* 603 *Q.*—SRI V. K. KOTHANDARAMAN : கனம் கைத்தொழில் அமைச்சர் அவர்கள் தயவுசெய்து பதிலளிப்பாரா—

(அ) விருதுநகரில் மார்க்கெட்டிங் சொசைட்டி உள்ளதா ?

(ஆ) எந்த ஆண்டு முதல் இயங்கிவருகிறது ?

(இ) வியாபாரப் பொருள், விவசாயப் பொருள் எல்லாவற்றிற்குமா அல்லது எதெதற்கு ?

(ஈ) இல்லை என்றால், எப்போது ஆரம்பிக்கப்படும் ?

THE HON. SRI R. VENKATARAMAN : (*a*) No Sir, but the marketing society at Sattur has jurisdiction over Virudhunagar.

(*b*) This Society was started on 17th January 1944.

(*c*) The main commodities handled by the Society are Chillies, Cotton and Onions.

(*d*) The question of organising a separate Marketing Society at Virudhunagar will be taken up if and when the need for a separate society is felt by the agriculturists in the area.

Uplift of Harijans

* 604 *Q*.—SRI P. G. MANICKAM : கனம் பொது மராமத்து அமைச்சர் அவர்கள் தயவுசெய்து பதிலளிப்பாரா—

(அ) ஹரிஜன முன்னேற்றத்துக்காகத் தொண்டாற்றிய பிரமுகர்களுக்குப் பரிசுகள் எந்த வருஷத்திலிருந்து வழங்கப்பட்டு வருகின்றன ?

(ஆ) 1958-ஆம் வருஷம் வரைக்கும் ஒவ்வொரு ஜில்லாவுக்கும் ஒதுக்கப்பட்ட தொகை எவ்வளவு ?

(இ) ஒவ்வொரு ஜில்லாவிலும் அமைக்கப்பட்டிருக்கும் ஜில்லா ஹரிஜன நல இலாகா கமிட்டி மூலமாக இப் பிரமுகர்களைத் தேர்ந்தெடுக்கும் படியாக சர்க்காரால் ஏதாவது உத்திரவு பிறப்பிக்கப்பட பரிசீலனை நடைபெற்று வருகிறதா ?

THE HON. SRI P. KAKKAN : (*a*) The award of prizes in the form of medals to those who have rendered service in the cause of removal of untouchability is in force from 1956.

(*b*) A statement [a] is placed on the table of the House.

(*c*) No, Sir.

SRI P. G. MANICKAM : சார், உண்மையாகவே ஒவ்வொரு ஜில்லாவிலும் யார் யார் ஹரிஜனங்களுக்காகத் தொண்டாற்றுகிறார்கள் என்பது ஹரிஜன எம்.எல்.ஏ.-க்களுக்கு நன்றாகத் தெரியுமாதலால், கலெக்டர் அவர்கள் "லிஸ்டைத்" தயார் செய்யும்போது ஹரிஜன எம்.எல்.ஏ.க்களைக் கலந்துகொண்டு செய்ய உத்தரவு இடுவார்களா ?

THE HON. SRI P. KAKKAN : கலெக்டர் அவர்களுக்கும் ஆங்காங்கு யார் யார் ஹரிஜனங்களுக்காகச் சேவை செய்கிறார்கள் என்று நன்றாகத் தெரியும். ஹரிஜன அட்வைசரி கமிட்டி என்று இதற்காக வைத்திருக்கிறார்கள். அந்தந்த ஜில்லாக்களில் இருக்கும் இதர தலைவர்களையும் கலந்துகொண்டுதான் கலெக்டர் லிஸ்டைத் தயார் செய்கிறார். கனம் அங்கத்தினர் அவர்கள் அப்படிப்பட்ட பெயரைச் சொன்னால் ஏற்றுக் கொள்ளப்படும்.

SRI K. PERIANNAN : ஜில்லா ஹரிஜன நலக் கமிட்டியில் உள்ள ஹரிஜன எம்.எல்.ஏ.க்கள் அங்கத்தினர்களாக இருக்கிறார்களா ? இல்லையென்றால் ஹரிஜன எம்.எல்.ஏ.க்களை அங்கத்தினர்களாகச் சேர்க்க அரசாங்கம் ஏற்பாடு செய்யுமா ?

THE HON. SRI P. KAKKAN : இதற்குத் தனிக் கேள்வி போட்டால் பரிசீலனை செய்து பார்த்துப் பதில் சொல்லுகிறேன்.

SRI K. B. S. MANI : முன்பு இந்த மெடல்கள் பிரபலமாக ஊழியம் செய்த ஹரிஜன ஊழியர்களுக்கும் கொடுக்கப்பட்டு வந்தது. இந்த ஆண்டில் இருந்து ஜாதி இந்துக்களுக்கு மட்டுந்தான் கொடுக்கப்படுகிறது. ஏன் ?

THE HON. SRI P. KAKKAN : யார் யார் சேவை செய்கிறார்களோ அவர்கள் எல்லோருக்குந்தான் கொடுக்கப்பட்டுவருகிறது.

---

[a] Printed as Appendix I on page 514 infra.